# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 316/மா/2025**
**நாள்: 19.12.2025**

S. H. முகம்மது உசேன்
திருநெல்வேலி --- முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
திருநெல்வேலி மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

திருநெல்வேலி, மேலப்பாளையம், காஜா நாயகம் தெரு, கதவு எண் 81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. H. முகம்மது உசேன் என்பவரின் 12.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.08.2025 அன்று பெறப்பட்டு, 316/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி, மேலப்பாளையம், காஜா நாயகம் தெரு, கதவு எண் 81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. H. முகம்மது உசேன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 12.08.2025 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு 46, காஜா நாயகம் தெரு, கதவு எண் 81 வீட்டிற்கு வசூல் செய்து வரும் சொத்துவரியை வணிக பயன்பாடு இனத்திலிருந்து குடியிருப்பு பயன்பாடு இனத்திற்கு மாற்றி சொத்துவரி வசூல் செய்ய கோரி சமர்ப்பித்த மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பிக்காத காரணத்தால் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு இந்த பிராது பணிவுடன் தாக்கல் செய்யப்படுகிறது.

2) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு 46க்கு உட்பட்ட காஜாநாயகம் தெரு, கதவு எண் 81 நம்பர் ஏற்பட்டுள்ள வீடு மனுதாரருக்கும் அவருடைய சகோதாரர்களுக்கும் பூர்வீக சொந்தமாய் பாத்தியப்பட்டது. மேற்படி வீட்டிற்கு சொத்துவரி அவர்களுடைய தாயார் அமீது பாத்துமாள் பெயரில் உள்ளது. சொத்துவரி விதிப்பு எண் 146/046/900314 ஆகும். மேற்படி வீடு அமைந்திருக்கும் பகுதி குடியிருப்பு பகுதி, மனுதாரருடைய வீடுமட்டுமல்லாமல் காஜா நாயகம் தெரு முழுவதும் குடியிருப்பு பகுதி ஆகும். மேற்படி வீட்டை மனுதாரர் ஆரம்ப காலத்திலிருந்தே சொந்த குடியிருப்பாக பயன்படுத்தி வந்துள்ளார். (பஞ்சாயத்து போர்டு காலத்திலிருந்து அதன்பின் மேலப்பாளையம் மாநகராட்சி) அந்த கால கட்டத்தில் 6 மாதத்திற்கு ஒரு தடவை ரூபாய் 90/– சொத்துவரியாக செலுத்தி வந்துள்ளார். இந்நிலையில், மனுதாரருடைய பொருளாதார சூழ்நிலையின் காரணமாக தாங்கள் குடியிருந்து வந்த வீட்டை திருநெல்வேலி மாவட்ட

மத்திய கூட்டுறவு வங்கிற்கு வாடகைக்கு கொடுத்துள்ளார்கள். அந்த சமயம் மேற்படி வீட்டிற்கு அவர்கள் செலுத்தி வந்த சொத்துவரியை சொந்த குடியிருப்பு இனத்திலிருந்து வணிக பயன்பாடு இனத்திற்கு மாற்றம் செய்து அதன் அடிப்படையில் சொத்துவரியை செலுத்தி வந்துள்ளார்கள்.

3) மனுதாரருடைய சொந்த குடியிருப்பு பயன்பாட்டிற்கு மேற்படி வீடு தேவை பட்டதால் மேற்படி வீட்டில் இயங்கி வந்த மத்திய கூட்டுறவு வங்கியை நிர்வாகம் மேற்படி வீட்டை காலி செய்து 30.11.2010 ஆம் தேதியில் காலி சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்துவிட்டது. அதற்கான ஆதாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி வீடு மனுதாரருடைய சொந்த குடியிருப்பு பயன்பாட்டிற்கு வந்து ஏறத்தாழ 14 ஆண்டு காலமாகிறது. எனவே, மனுதாரர் மேற்படி வீட்டிற்கு செலுத்தி வந்த சொத்துவரியை வணிக பயன்பாட்டு இனத்திலிருந்து மாற்றம் செய்து இதற்கு முன் செலுத்தி வந்த சொந்த குடியிருப்பு இனத்தில் சொத்துவரி செலுத்தி வருவதற்கு திருநெல்வேலி மாநகராட்சிக்கு பல தடவைகள் மனு அளித்துள்ளார். ஆனால் மாநகராட்சி நிர்வாகம் மனுதாரர் மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2021–2022 ஆண்டு முதல் 2024–2025 ஆம் ஆண்டு வரை உள்ள காலத்திற்கு சொத்துவரி ரூபாய் 27,728/– செலுத்துவதற்கு அறிவிப்பு அனுப்பி மேற்படி தொகையை செலுத்துவதற்கு மாநகராட்சி மேற்படி தொகையை செலுத்த முடியாத நிலையில் உள்ளார். மனுதாரர் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார். இதற்கு முன் வணிக பயன்பாட்டில் மூலம் வாடகை பணம் வந்தது. அதன் மூலம் மனுதாரர் சொத்துவரியை செலுத்தி வந்தார். தற்போது அதே தொகையை செலுத்த மனுதாரரை நெருக்கடி கொடுப்பது எந்தவிதத்திலும் நியாயம் கிடையாது.

4) மேற்படி வீட்டில் மனுதாரர் சொந்தமாக குடியிருந்த வந்த காலத்தில் சொந்த குடியிருப்பு இனத்தில் (category) சொத்துவரி மற்றும் மின் கட்டணம் செலுத்தி வந்துள்ளார். மேற்படி வீடு வணிக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்ததும் மின் கட்டணத்தை வணிக பயன்பாடு இனத்திலிருந்து, சொந்த குடியிருப்பு இனத்திற்கு மாற்றம் செய்து மின் கட்டணம் செலுத்தி வருகிறார். ஆனால் மேற்படி வீட்டிற்குரிய சொத்துவரியை வணிக பயன்பாட்டிலிருந்து சொந்த குடியிருப்பு இனத்திற்கு மாற்றம் செய்ய வேண்டி திருநெல்வேலி மாநகராட்சிக்கு பல தடவைகள் மனு அளித்தும், நேரில் பல தடவைகள் சென்றும் மனுதாரருக்கு எந்தவித நியாயமும் கிடைக்கவில்லை. மாறாக மனுதாரர் அங்கும் இங்கும் அழைத்து அவருடைய கால் ஒடிந்ததுதான் மிச்சம். அதன்பின் மனுதாரர் தபால் மூலம் திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகத்திற்கு மனு அனுப்பி, மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்தும், மேற்படி வீட்டை நேரில் ஆய்வு செய்து உண்மையை தெரிந்து அதன் அடிப்படையில் மனுதாரருடைய கோரிக்கையை நிறைவு செய்து கொடுக்க வேண்டியுள்ளார். ஆனால் இதுவரை திருநெல்வேலி மாநகராட்சியின் நிர்வாகம் மனுதாரரின் நியாயமான கோரிக்கை மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனுதாரரின் மனுவின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது மாநகராட்சி நிர்வாகத்தின் கடமை அதை செய்வதற்கு ஏன் காலதாமதம் என்பது தெரியவில்லை. நிர்வாகத்தின் காலதாமதத்தால், மனுதாரர் பொருளாதார ரீதியாக நஷ்டம் அடைந்து கொண்டு வருகிறார். இதை யார் பொறுப்பார்கள் என்பது கேள்வி குறியாக உள்ளது.

5) மனுதாரருடைய கோரிக்கை நியாயமானது, மனுதாரர் குடியிருந்து வந்த வீட்டை கஷ்டத்தின் காரணமாக அதை வாடகைக்கு கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் சொத்துவரி குடியிருப்பு இனத்திலிருந்து, வணிக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் சொத்துவரி மற்றும் மின் கட்டணம் செலுத்தி வந்தார்கள் என்பது நியாயமான ஒன்று. அதன்பின் மேற்படி வீடு வணிக பயன்பாட்டிலிருந்து சொந்த குடியிருப்பிற்கு மாறிவிட்டது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மனு செய்து மின் கட்டணத்தை வணிக பயன்பாடு (category) இனத்திலிருந்து சொந்த குடியிருப்பு இனத்திற்கு மாற்றம் செய்து அதன் அடிப்படையில் மின் கட்டணம் செலுத்தி வருகிறார். ஆனால் திருநெல்வேலி மாநகராட்சி மட்டும் மனுதாரருடைய கோரிக்கையை

செவிசாய்க்காமல், எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதால் மனுதாரர் சொந்தமாக வசித்து வரும் வீட்டிற்கு வணிக பயன்பாடு (category) இனத்தில் சொத்துவரி செலுத்தி வருவது எந்தவிதத்தில் நியாயம்? இது சமூக நீதிக்கு புறம்பானது இல்லையா? திருநெல்வேலி மாநகராட்சியின் இந்த நடவடிக்கை எந்த வகையில் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அது மட்டும் அல்ல இச்செயல் மனுதாரருக்கு பொருளாதார வகையில் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டியிருக்கிறது.

6) திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகத்திற்கு, சொந்தமாக குடியிருந்து வரும் வீட்டிற்கு, வணிக பயன்பாட்டிற்கான அடிப்படையில் மனுதாரரைப் போன்று வேறு யாரும் சொத்துவரி செலுத்தி வருவதில்லை. ஒரு நபரைக்கூட குறிப்பிட்டு காட்டமுடியாது என்பது மிகவும் வருந்தக்கூடிய விசயம், திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகம் ஏன் மனுதாரருடைய நியாயமான கோரிக்கை மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கான உண்மையான காரணம் தெரியவில்லை. அதனுடைய உள்நோக்கம் என்ன என்பதும் தெரியவில்லை (Malafide intention).

7) திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகம் இந்திய அரசியல் அமைப்பு சாசன சட்டம் ஷரத்து 14 முதல் 18 வரையுள்ள அடிப்படை உரிமைகளை மனுதாரருக்கு வழங்க மறுக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. சிறுபான்மை வகுப்பைச் சார்ந்த முஸ்லீம் என்பதாலா அல்லது வேறு காரணமா என்பது தெரியவில்லை. எங்கள் விசயத்தில் சமூக நீதியும் இல்லை. (Social Justice) சமூக நீதிக்கான அரசியலமைப்பு ரீதியான பார்வை என்ன என்ற கேள்விக்கு பதிலளித்த இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு பி.வி. நாகரத்னா அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

“Justice B.V. Nagarathna, Supeme Court of India, said in answer to the question of What is this constitutional vision of social justice that social justice is an ideal that is achieved through the progressive elimination of injustice and inequity in social. It calls for transformative efforts to undo the impact of pervasive social hierarchies and past injustice. It also demands the creations of conditions of justice.”

8) திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகம் வேண்டுமென்றே மனுதாரர் மனுவின் உரிய நடவடிக்கை எடுத்து மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றம் செய்யாமல் உள்நோக்கத்தோடு காலதாமதம் செய்துவருகிறது என்பது மேற்கண்ட சங்கதிகள் மூலம் தெள்ள தெளிவாக தெரியவருகிறது. மேலும் மாநகராட்சி நிர்வாகத்தின் அலட்சிய போக்கால் மனுதாரருக்கு பெருத்த பொருள் நஷ்டமும் மன உளைச்சலும் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது. மனுதாரர் திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகத்தோடு ஏற்கனவே செய்துள்ள கடித போக்குவரத்துகளையும் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது.

9) மனுதாரரின் வீடு வணிக பயன்பாடு என்ற உபயோகத்திலிருந்து சொந்த குடியிருப்பு பயன்பாட்டிற்கு 01.12.2010 ஆம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. அது முதல் மனுதாரர் சொத்துவரியை சொந்த குடியிருப்பு உபயோகத்திற்கு மாற்றம் செய்து அதன் அடிப்படையில் சொத்துவரி செலுத்த திருநெல்வேலி மாநகராட்சியை கேட்டு வந்தார். ஆனால் மாநகராட்சி நிர்வாகம் நெருக்கடியை கொடுத்து 31.03.2021 தேதி வரை வணிக பயன்பாடு அடிப்படையில் அதிக சொத்துவரியை திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகம் 10 ஆண்டுகளுக்கு மேல் வசூல் செய்து விட்டது. இது சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

10) எனவே, மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மனுதாரரின் இந்த மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து 01.10.2010ம் தேதி முதல் மனுதாரரின் வீடு சொந்த குடியிருப்பிற்கு மாறிவிட்டது என்பதை உறுதி செய்து அந்த தேதி

முதல் மனுதாரர் வீட்டிற்கு சொத்துவரியை சொந்த குடியிருப்பு என்ற இனத்திற்கு மாற்றம் செய்து (அதாவது மனுதாரர் ஏற்கனவே சொந்த குடியிருப்பிற்கு செலுத்தி வந்த சொத்துவரி ரூபாய் 90/– என்பதை அடிப்படையாக வைத்து அதிலிருந்து சொத்துவரி உயர்வு செய்யப்பட்டதை கணக்கிட்டும்) மேலும் மனுதாரரின் வீட்டிற்கு அக்கம் பக்கம் உள்ளவர்கள் செலுத்தி வரும் சொத்துவரியை கருத்தில் கொண்டும் மனுதாரரின் வீட்டிற்கு சொந்த குடியிருப்பு பயன்பாடு இனத்தில் சொத்துவரி நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பிக்கவும், 10 ஆண்டுகளுக்கு மேல் மனுதாரர் வணிக பயன்பாடு இனத்தில் அதிகமாக செலுத்தியுள்ள தொகையை, திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகம் 24.05.2024 ஆம் தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பியுள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ள பாக்கி தொகை ரூபாய் 27,728/–ல் (2021–2022 ஆண்டு முதல் 2024–2025 வரையுள்ள காலத்திற்கு) ஈடு செய்யும் மீதி தொகையை மனுதாரர் செலுத்த உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் இந்த மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை பணிவுடன் பிரார்த்திக்கின்றேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. இந்நிலையில், மனுதாரர் தனது நாளிடப்படாத இம்முறைமன்றத்தில் 22.10.2025–ல் கிடைக்கப்பெற்ற கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

“எனது வீடு 81 காஜாநாயகம் தெரு மேலப்பாளையம் மண்டலத்தில் உள்ளது. எனது வீட்டிற்கு வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்ய தெரிவித்து பலமுறை மனு செய்தும் மாற்றம் செய்யாத காரணத்தினால், நான் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னைக்கு மனு செய்தேன்.

அதன் அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திலிருந்து வருவாய் உதவியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் நேரில் வந்து, ஆய்வு செய்து வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே நான் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னைக்கு அளித்த மனுவினை வாபஸ் பெற்று கொள்கிறேன்.

நான் முறையீட்டு மனுவிற்கு தீர்வு காணப்பட்டதால் மேல்நடவடிக்கை தொடர வேண்டாம் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

4. திருநெல்வேலி மாநகராட்சி உதவி ஆணையாளர் தனது 16.10.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

“மனுதாரர் திரு. எஸ். எச். முகம்மது உசேன் த/பெ முகம்மது ஹனிபா என்பவர் தனது 16.10.2025ம் தேதிய உதவி ஆணையாளர் மேலப்பாளையம் மண்டல அலுவலகம், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில்,

“திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திலிருந்து வருவாய் உதவியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் நேரில் வந்து, ஆய்வு செய்து வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே நான் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னைக்கு அளித்த மனுவினை வாபஸ் பெற்று கொள்கிறேன்.”

நான் முறையிட்ட மனுவிற்கு தீர்வு காணப்பட்டதால் மேல் நடவடிக்கை தொடர வேண்டாம் என கேட்டுள்ளார்.

எனவே மனுதாரருக்கு வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றப்பட்ட கணினி பிரதி மற்றும் மனுதாரர் அனுப்பிய கடிதம் ஆகியவை இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பப்படுகின்றது.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் மனு, கடிதம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருநெல்வேலி, கதவு எண் 81 காஜாநாயகம் தெரு மேலப்பாளையம் மண்டலத்தில் உள்ள மனுதாரரின் வீட்டிற்கு வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக சொத்துவரி மாற்றம் செய்ய திருநெல்வேலி மாநகராட்சிக்கு மனு செய்தும் சொத்துவரி மாற்றம் செய்யாத காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்துள்ளார் என்பதும், அதன் அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திலிருந்து வருவாய் உதவியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் நேரில் வந்து, ஆய்வு செய்து சொத்துவரி வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், எனவே மனுதாரர் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அளித்த முறையீட்டு மனுவிற்கு தீர்வு காணப்பட்டதால் மேல்நடவடிக்கை தொடர வேண்டாம் என தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதும் மனுதாரரின் மனு மற்றும் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

மேற்கண்ட மனுதாரரின் வீட்டிற்கு, திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திலிருந்து வருவாய் உதவியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்த பின்னர், வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் முறையீட்டு மனுவிற்கு தீர்வு காணப்பட்டதால், அம்மனுவினை வாபஸ் பெற்று, மேல்நடவடிக்கை தொடர வேண்டாம் என மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார் என்பதும் திருநெல்வேலி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில், மனுதாரர் தன்னுடைய முறையீட்டு மனுவிற்கு தீர்வு காணப்பட்டதால் மேல்நடவடிக்கை தொடர வேண்டாம் என கேட்டுக் கொண்டுள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

( ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.H. முகம்மது உசேன்,
கதவு எண் 81, காஜா நாயகம் தெரு,
மேலப்பாளையம், திருநெல்வேலி–627 005.

2) ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.

3) உதவி ஆணையர்,
மேலப்பாளையம் மண்டலம்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் ( Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்